# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



21

சத்தியமங்கலம் ஊராட்சி ஒன்றியம், கொத்தமங்கலம் ஊராட்சி ஊராட்சி
ஊராட்சிமன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

ஈரோடு மாவட்டம் கொத்தமங்கலம் ஊராட்சி பவானிசாகர் வட்டாரம்

முன்னிலை:திருமதி எஸ். மல்லிகா,

நாள்: 01 . 02 . 2020

ஆனுமதி எண்:

பொருள்: தமிழ்நாடு ஊராட்சிகள் கட்டிட விதிகள் 1997– ஈரோடு மாவட்டம் – சத்தியமங்கலம் வட்டம் – கொத்தமங்கலம் ஊராட்சி - இக்கரைதத்தப்பள்ளி கிராமம் – க.ச.எண். 94–ல் அமையும் 21150.00 ச.மீ பரப்பளவு கொண்ட மனையிடத்தில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் 20 பிளாக்குகளில் 480 குடியிருப்புகள் கொண்ட கட்டிடத்திற்கு கட்டிட வரைபட அனுமதி உத்தரவு வழங்குவது– தொடர்பாக.

பார்வை:

1. நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், திருப்பூர் கோட்டம் அவர்களின் கடிதம் ந.க.எண்.107/SCB/JATP Dvn/2017, நாள். 19.11.2018 மற்றும் 06.03.2019 மற்றும் நக.எண்.107/த.கு.ம.வா/தி.கோ/2017, நாள்.15.05.2019 மற்றும் ந.க.எண்.SCBITDRDN/JA/107/18, நாள். 21.10.2019.
2. தனி அலுவலர்/வட்டார வளர்ச்சி அலுவலர், பவானிசாகர் ஊராட்சி ஒன்றியம் அவர்களின் கடிதம் ந.க.எண்.946/17/ஆ1, நாள். 15.10.2018.
3. அரசு ஆணை எண். 86, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புறவளர்ச்சித் (யு.டி.4) துறை, நாள். 28.02.2012
4. அரசு ஆணைஎண்.135, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்.21.07.2017.
5. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.7486/2009/பிஏ2, நாள் 16.04.2009.
6. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.12201/2017/spl.cell, நாள். 28.09.2017.
7. மாவட்ட அலுவலர், தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் நிலையம், ஈரோடு மாவட்டம் அவர்களின் கடிதம் ஒ.மு.எண்.10350/இV2018, நாள். 13.11.2018.
8. இவ்வலுவலக கடிதம் இதே எண்.நாள். 07.01.2019, 04.04.2019 மற்றும் 28.05.2019 நகர்ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களுக்கு முகவரியிட்டது.
9. இவ்வலுவலக் கடிதம் இதே எண். நாள். 29.04.2019 (தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு முகவரியிட்டது).
10. ஆணை எண். 85, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (4.டி.2-2) துறை, நாள், 16.05.207
11. அரசாணை எண். 135, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள் 21.07.2017.
12. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.21075/2009/பிஏ1, நாள். 04.04.2012
13. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.122012017/சிபி, நாள். 28.09.2017.
14. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந. க.எண் 14227/2017/சிபி, நாள் 14.12.2017.
15. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந. க.எண்.516/2019/பிஏ2 /TCP-4, நாள் 21.06.2019
16. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், சேலம் மண்டலம், சேலம், அவர்களின் கடிதம் ந.க. எண். 18845/2018 சேம–3, நாள்: 31.10. 2019.

உத்திரவு:

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், கொத்தமங்கலம் ஊராட்சி - இக்கரைதத்தப்பள்ளி கிராமம், க.ச.எண். 94–ல் அமையும் 21150.00 ச.மீ பரப்பளவு கொண்ட மனை க்கு, A - O வரை எல்லையிட்டு

Scanned with CamScanner

மனையிட ஒப்புதலும், அம்மனையில் அமையும் உத்தேச தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் 24 குடியிருப்புகள் 480 கொண்ட பிளாக் 'A1 to A20' என 20 பிளாக்குகளில் 480 குடியிருப்புகள் கொண்ட அடுக்குமாடி குடியிருப்பு கட்டுமான கட்டிட வரைபடத்திற்கு உ.வ/நஊஅ(ஜிபா) எண்.121/2010 என எண்ணிட்டு, பார்வை16-ல் காணும் நகர் ஊரமைப்பு உதவிஇயக்குநர், சேலம் மண்டலம், சேலம், அவர்களால் தொழில்நுட்ப முன் இசைவு அளிக்கப்பட்டதை தொடர்ந்து கட்டிடத்திற்கு 1997-ம் வருடத்திய ஊராட்சிகள் கட்டிடவிதியின் கீழ்,கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதி அளிக்கப்படுகிறது.

உத்தேச கட்டுமான பரப்பு விவரம் கீழ்க்கண்டவாறு அமைகிறது.

| One Block | Non FSI Area In | Net FSI Area | Total Built-up |
|---|---|---|---|
| தரைதளம் | – | 283.47ச.மீ. | 296.83ச.மீ. |
| முதல்தளம் | – | 283.47ச.மீ | 296.83ச.மீ |
| இரண்டாம் தளம் | – | 283.47ச.மீ | 296.83ச.மீ |
| TOTAL FOR ONE BLOCK | | 850.41ச.மீ. | 890.49ச.மீ. |
| A1,A2,A3,A4,A5,A6,A7,A8,A9,A10, A11,A12,A13,A14,A15,A16,A17,A18,A19,A20 | | 850.41x20 | 890.49x20 |
| TOTAL FOR 20 BLOCKS | | 17008.20 | 17810.00 |

I) Plint Area / Unit (Type Design No. 09/2017 Block 'A1 to A20' = 37.12 M²

Total No. of Tenements -- 480 Nos.

Total Construction Area -- 890.49 M² +890.49 M² + 890.49 M² +890.49 M² + 890.49 M² +890.49 M² +890.49 M² +890.49 M² +890.49 M² +890.49 M² +890.49M²+890.49M² · 890.49 M² · 890.49 M² + 890.49 M² · 890.49 M² · 890.49 M² · 890.49 M² · 890.49 M² · 890.49 M² = 17,810.00 M²

Floor Space Index = 0.84

Plot Coverage = 28.07 %

<u>சிறப்பு நிபந்தனைகள்</u>

1) As per Ministry of Environment, Forest and Climate change Notification, dated. 22.12.2014. "The buildings shall ensure sustainable environmental Management solid and liquid waste Management rain water harvesting and may use recycled materials such as fly ash bricks".

2) As per G.O (Ms) No.161, H&UD Department, dated. 26.06.2013 "OSR portion is earmarked as OSR and kept open to sky without any construction.

3) "நகர் ஊரமைப்புத் துறைசட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகைபத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகாரபத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

4) கட்டுமானங்கள் நடைபெறும் இடத்தில் பொதுமக்கள் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில், வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகளின் படிதளப்பரப்பு விகிதம் (FSI), திறவிடங்கள்(Setbacks), வாகனநிறுத்தம் ஆகியவை குறிப்பிடப்படவேண்டும்.

5) G.O.Ms.No.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை, நாள். 04.02.2019–ன்படி தெரிவித்துள்ள அனைத்து நிபந்தனைகளும் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

6) கட்டடம் கட்டப்படும் போது அரசு அங்கீகாரம் பெற்ற மின் ஒப்பந்ததாரர் மூலம் ஒயரிங் செய்யப்பட வேண்டும்.

7) Planning Permission is issued in accordance with the provisions of the Town and Country Planning act and the rules made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the Building Rules under the Local bodies Act. Planning Permissions is issued subject to the condition that the applicant/developer and also the architects/Licensed Surveyors and the Structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.

8) It is responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundations.

9) The provisions in the G.O.(Ms) No.17, Housing and Urban Development (UD4(3)) Department dated: 05.02.2016 relating to installation and use of Solar Energy system should be followed.

Scanned by CamScanner

Scanned with CamScanner

10) தீயணைப்புத் துறையின் தடையின்மை சான்று மற்றும் பொதுபணித் துறையின் வாய்க்கால் குறித்து உரிய தடையின்மை சான்று பெறப்பட வேண்டும். பெறப்பட்ட பின் மேற்கண்ட துறைகளின் நிபந்தனைகளை பின்பற்றப்பட வேண்டும்.

11) மாண்பு மிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை வழக்குW.P.(MP) No. 6912 and 6913 of 2019-ல் நீதிமன்ற உத்தரவு நாள். 02.04.2019–ன்படி பின்பற்றப்பட வேண்டும்.

<u>பொது நிபந்தனைகள்</u>

1. உத்தேச கட்டுமானத்திற்கு Solar Water Heating System அமைக்கப்படவேண்டும்.

2. மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன் படியே நிலைநிறுத்தப்படவேண்டும்.

3. தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எந்தவித மாற்றமும் செய்தல்கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன் அனுமதி பெறப்படவேண்டும்.

4. மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண்.138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை, நாள்.11.10.2002–ன்படி கட்டிடத்தில் செயல்படுத்தப்படவேண்டும்.

5. உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், உபயோகிப் போருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் மற்றும் இதர தேவைக்கான நீர் வசதிகள் ஆகியவை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்துதர வேண்டும்.

6. Site Plan-ல் காட்டப்பட்டுள்ளவாறு வாகனம் நிறுத்துமிடம் நிலை நிறுத்தப்படவேண்டும்.

7. உத்தேச கட்டுமானத்தில் விதிப்படித் தேவையான அளவுக்கு தீ தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.

8. அரசாணை என்.341 , நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.நி.1), நாள்: 03.11.2004–ன்படி செப்டிக் டேங்கில் "U" Trapஅமைத்தல் வேண்டும்.

9. சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின் படி உத்தேச கட்டிடத்திற்கு "FLY ASH BRICKS"மற்றும் Materials பயன்படுத்தப்பட வேண்டும்.

10. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும்போது அவ்விடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்.

11. The Applicant/developer, Government Departments and also the architects/Registered Engineers and the Structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.

12. மத்திய மற்றும் மாநிலஅரசு துறையினரிடமிருந்து பெறப்பட்ட தடையின்மை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் கண்டிப்பாக நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.

13. பார்வை 4–ல் சுட்டிய நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி"The Tamil Nadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development Department dated 22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation and Development) Act 2016. The Promoter has to advertise, market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any polot, apartment or building, as the case may be in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority"

14. பார்வை 8–ல் சுட்டிய அரசாணையின் படிகீழ்க்காணும் நிபந்தனைகள் பின்பற்றப்படவேண்டும்.

i. The Applicant/Owner/Builder/Promoter/Power of Attorney Holder and any other Person who is acquiring interest on the property for which Technical Clearance is issued, shall not put the building to use without obtaining Completion Certificate from The Regional Assistant Director of Town & Country Planning, Tiruppur Region, Tiruppur.

ii. a) The Applicant/Owner/Builder/Promoter/Power of Attorney holder and any other person who is acquiring interest on the property for which Technical Clearance is issued, shall submit the application along with the plan showing the Site Boundary, dimension of the building and the setback on all around and the plan must be authenticated by the applicant and Architect/Structural Engineer/Licensed Surveyor for the issue of Construction Continuance Certificate (CCC).

b) Also, the Applicant/Builder/Promoter/Power of Attorney holder and any other person who is acquiring interest on the property for which Technical Clearance is issued, shall submit

Scanned by CamScann

Scanned with CamScanner

application along with a drawing / plan showing the actual construction made at site when the construction is completed without any requirement of further civil works for the issue of Completion Certificate (CC)

iii. The Applicant/Owner/Builder/Promoter/Power of Attorney holder and any other person who is acquiring interest on the property for which Technical Clearance is issued, shall comply and other conditions/directions stipulated in the operational guidelines issued/subsequently to be issued by the DTCP.

15. ஊராட்சிநிலத்தில் அல்லதுதெருவில் எந்தவிதமானஆக்கிரமிப்புச் செய்யக்கூடாது.

16. பொதுப்பாதையிலிருந்து 1.5 மீட்டர் தூரத்தில் நிலையானகட்டிடங்கள் எதுவும் கட்டக்கூடாது சுற்றுசுவர் 1.8 மீட்டருக்குமேற்படாமல் இருக்கவேண்டும்.

17. கட்டிடத்திற்குஅனுமதிபெற்ற இடத்தில் மேற்படிகட்டிடம் கட்டுவதற்குமண் எடுக்கக்கூடாது.

18. அங்கீகாரம் செய்யப்பட்டவரைபடத்தில் எந்தவிதமாறுதலும் இல்லாமல் கட்டிடம் கட்டவேண்டும் மாறுதல் செய்வதாக இருந்தால் முன் கூட்டியே அனுமதி பெற்றுக் கொள்ளவேண்டும்.

19. கொடுக்கப்பட்டுள்ளதவணைக்குள் கட்டிடம் கட்டிமுடிக்கவில்லையானால் அதற்கு 30 நாட்களுக்கு முன்னதாகவே மனுக்கொடுத்து நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டணம் செலுத்தி அனுமதிக்காலத்தை நீடித்துக் கொடுக்கவேண்டும். அவ்வாறு அனுமதிபெறாமல் கட்டிட வேலை நடக்கக்கூடாது.

20. கழிப்பிடம்,சாக்கடை,தொட்டி முதலியன சுகாதார முறைப்படிக் கட்டிடத்தளம் போடப்படவேண்டும் எளிதாக சுத்தம் செய்ய மார்க்கம் உள்ளதாகவும் இருக்கவேண்டும்.

21. கட்டிடம் முடிந்த அல்லது குடியேறிய 15 நாட்களுக்குள் அவ்விபரம் அலுவலர் அவர்களுக்கு தெரியப்படுத்துவதுடன் கட்டிடத்தின் முடிவான வரைபடம் ஒன்றும் அனுப்பிவைக்கவேண்டும்.

22. தற்போதுகட்டட அனுமதிக்கு செலுத்தப்பட்டதொகை குறைவென தெரியவந்தால் அரசின் மூலம் தெரிவிக்கப்கடும் கூடுதல் தொகையை உடனே செலுத்தவேண்டும்.

23. மெயின் ரோட்டிலிருந்து 5 அடிதள்ளிக் கட்டிடம் கட்டவேண்டும்.

24. மனுதாரர் கட்டிட அனுமதி குறித்து வழங்கப்பட்ட வரைபடம் சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல எனஅறியப்பட்டால் கட்டிடஅனுமதி வழங்குவதால் உள்ளாட்சி நிறுவனத்திற்கு பாதிப்பு ஏற்படக் கூடிய சூழ்நிலை ஏற்படின் இக்கட்டிடத்திற்கு வழங்கப்பட்ட ஒப்புதல் எவ்வித முன் அறிவிப்பு மின்றிரத்து செய்யப்படும்.

25. மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைக்கப்பட வேண்டும்.

S.மல்லிகா 1-02-2020

தலைவர்
கொத்தமங்கலம் ஊராட்சி
ஊராட்சி மன்ற தலைவர்
கொத்தமங்கலம் ஊராட்சி
பவானிசாகர் ஊராட்சி ஒன்றியம்.

இணைப்பு

ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடங்கள்
1 தொகுப்புகள்.

பெறுநர்:
நிர்வாகபொறியாளர்,
தமிழ்நாடுகுடிசைமாற்றுவாரியம்,
திருப்பூர் கோட்டம்,
திருப்பூர் – 641 602.

01/02/2020.

EXECUTIVE ENGINEER
TNSCB, Tirupur Division

Scanned with CamScanner

115

107

**ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள்**
**பிறப்பிப்பவர்: டாக்டர் எஸ்.பிரபாகர், இ.ஆ.ப.,**

ந.க.4320/2018/உ2 நாள்: 01.03.2018.

பொருள்: நில உரிமை மாற்றம் - ஈரோடு மாவட்டம் - சத்தியமங்கலம் வட்டம் - இக்கரைதத்தப்பள்ளி கிராமம், ரி.ச.எண்: 94 அனாதீனப் புறம்போக்கில் பு.ஹெக்.2.11.50 பரப்பில் அடுக்குமாடி குடியிருப்புகள் அமைக்க குடிசை மாற்று வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்ய முன்நுழைவு அனுமதி கோரியது - முன்மொழிவு வரப்பெற்றது - தொடர்பாக.

பார்வை: கோபிசெட்டிபாளையம் வருவாய் கோட்டாட்சியரின் ந.க.1534/2018/அ3, நாள்: 26.02.2018

◎◎◎◎

**ஆணை:**

ஈரோடு வட்டம், சத்தியமங்கலம் வட்டம், இக்கரைதத்தப்பள்ளி கிராமம், ரி.ச.எண்: 94 அனாதீனப் புறம்போக்கில் 2.11.5 ஹெக்டேர் பரப்பில் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு முன்நுழைவு அனுமதி வழங்க பரிந்துரை செய்து பார்வையில் வரப்பெற்ற கோபிசெட்டிபாளையம் வருவாய் கோட்டாட்சியரின் முன்மொழிவு பரிசீலனை செய்யப்பட்டது. அதன் அடிப்படையில் பின்வருமாறு முன்நுழைவு அனுமதி வழங்கி உத்தரவிடப்படுகிறது.

**நிலத்தின் வகைபாடு மற்றும் பரப்பளவு:**

சத்தியமங்கலம் வட்டம், இக்கரைதத்தப்பள்ளி கிராமம், ரி.ச.எண்.94, 2.11.50 ஹெக்டேர் நிலம் அனாதீனம் என கிராம கணக்குகளில் தாக்கலாகியுள்ளது.

**அ1 விளம்பரம் :**

சத்தியமங்கலம் வட்டம், இக்கரைதத்தப்பள்ளி கிராமம், ரி.ச.எண்.94-ல் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட, குடிசை மாற்று வாரியத்திற்கு முன்நுழைவு அனுமதி வழங்குவது தொடர்பாக, மேற்படி கிராமத்தில் கடந்த 08.02.2018-ம் நாளன்று "அ1" விளம்பரம் தண்டோரா மூலம் பிரசித்தம் செய்து பொதுமக்கள் கையொப்பம் பெறப்பட்டது. நாளது வரை ஆட்சேபணைகள் ஏதும் வரப்பெறவில்லை. நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர், பவானிசாகர் சட்டமன்ற உறுப்பினர், கொத்தமங்கலம் ஊராட்சி தனிஅலுவலர் ஆகியோர்களுக்கு தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்தின் மூலம் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட முன்நுழைவு அனுமதி வழங்குவது தொடர்பாக, ஆட்சேபனை ஏதுமிருப்பின் 15 தினங்களுக்குள் எழுத்துமூலமாக

Scanned by CamScanner

Scanned with CamScanner

இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்குமாறு கடிதம் அனுப்பப்பட்டதில், நாளது வரை ஆட்சேபணைகள் ஏதும் வரப்பெறவில்லை.

உட்பிரிவு:

சத்தியமங்கலம் வட்டம், இக்கரைதத்தப்பள்ளி கிராமம், ரீ.ச.எண்.94-ல் முழு புலமும் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| கூராய்விற்கு முன் | | | | | |
|---|---|---|---|---|---|
| புல எண் | வகைபாடு | தீர்வை விகிதம் (ஹெக்டேருக்கு) ரூ-பை | பரப்பு | தீர்வை | நிலவகை |
| 94 | ச.பு | 1.09 | 2.11.50 | 2.31 | அனாதீனம் (தீர்வை விதிக்கப்பட்ட தரிசு) |
| கூராய்விற்கு பின் | | | | | |
| 94 | ச.பு | - | 2.11.50 | - | தமிழ்நாடு குடிசை மாற்றுவாரியம் |

நிலமதிப்பு :

சத்தியமங்கலம் வட்டம், இக்கரைதத்தப்பள்ளி கிராமம், ரீ.ச.எண்.94-ல் முன்நுழைவு அனுமதி வழங்க உத்தேசித்துள்ள புலம் அரசு புறம்போக்கு என்பதால் நிலமதிப்பு குறிப்பிடப்படவில்லை என்பதால், அருகில் உள்ள புலமான ரீ.சஎண் 95 மாதிரி புலமாக தேர்வு செய்யப்பட்டு அப்புலத்தின் நிலமதிப்பு கணினி வழிகாட்டி பதிவேட்டில் இருந்து பெறப்பட்டது. மேற்படி இக்கரைதத்தப்பள்ளி கிராமம் ரீ.சஎண் 95 -ன் வழிகாட்டி மதிப்பு ஒரு ஹெக்டேர் மதிப்பு ரூ.6,62,500/- (ரூபாய் ஆறு இலட்சத்து அறுபத்தி இரண்டாயிரத்து ஐநூறு) எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி முன்நுழைவு அனுமதி வழங்க உத்தேசித்துள்ள ரீ.ச.எண்.94-ல் 2.11.50 ஹெக்டேர் நிலத்தின் மதிப்பு ரூ.14,01,188/- (ரூபாய் பதினான்கு இலட்சத்து ஓராயிரத்து நூற்றி என்பத்தி எட்டு ) ஆகிறது.

கற்கிரையம் :

முன்நுழைவு அனுமதி வழங்க உத்தேசித்துள்ள பூமியில் புதிய நில அளவைக் கற்கள் ஏதும் நடப்படுவதில்லை. எனவே கற்கிரயம் ஏதும் வசூலிக்கப்பட வேண்டியதில்லை.

மரக்கிரையம் :

முன்நுழைவு அனுமதி வழங்க உத்தேசித்துள்ள காலைகளில் மரங்கள் ஏதும் இல்லை. எனவே, மரக்கிரையம் வசூலிக்க வேண்டியதில்லை.

Scanned by CamScanner

Scanned with CamScanner

<u>உட்பிரிவுக் கட்டணம் :</u>

முன்நுழைவு அனுமதி வழங்க உத்தேசித்துள்ள புலமான 94 முழு புலம் என்பதால் உட்பிரிவு செய்யப்படவில்லை. எனவே உட்பிரிவு கட்டணம் வசூலிக்க வேண்டியதில்லை.

<u>பொது :</u>

முன்நுழைவு அனுமதி வழங்க உத்தேசித்துள்ள புலத்தில் உயர்மின்னழுத்தக் கம்பிகள் செல்லவில்லை. மேற்படிபுலத்தில் வரலாற்று சின்னங்களோ, புராதன சின்னங்களோ ஏதும் இல்லை.

எனவே, ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், இக்கரைதத்தப்பள்ளி கிராமம், ரி.ச.எண்.94-ல் 2.11.50 ஹெக்டேர் அனாதீனப் புறம்போக்கு நிலத்தினை அனைவருக்கும் வீடு திட்டத்தின் கீழ் அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடம் கட்ட, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு பின்வரும் நிபந்தனைகள் விதித்து முன்நுழைவு அனுமதி வழங்கி உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

<u>நிபந்தனைகள்</u>

1. அரசு விதிக்கும் நிபந்தனைகளுக்கு உட்பட வேண்டும்.
2. கட்டிடம் எழுப்புவதற்கு முன் நிலமாற்றம் செய்யப்பட உள்ள பரப்பினை நிலஅளவை செய்து நான்கு மால்களை உறுதி செய்து கொள்ள வேண்டும்.
3. நில உரிமை மாற்றத்தின் போது அரசு நிர்ணயிக்கும் மரமதிப்பு, கல்கட்டணம், உட்பிரிவு கட்டணம் போன்ற இதர கட்டணங்கள் இருப்பின் கேட்புத் துறை செலுத்த வேண்டும்.
4. எந்த நோக்கத்திற்காக முன்நுழைவு அனுமதி வழங்கப்பட்டதோ அதற்காக மட்டுமே பிரஸ்தாப நிலத்தினை பயன்படுத்த வேண்டும்.
5. எதிர்காலத்தில் பிரஸ்தாப புலமோ அல்லது அதன் ஒருபகுதியோ தேவையில்லை என்றால் அதனை வருவாய் துறையிடம் திரும்ப ஒப்படைக்க வேண்டும்.

Scanned by CamScanner

Scanned with CamScanner

6. பிரஸ்தாப புலம் எந்த நோக்கத்திற்காக முன்நுழைவு அனுமதி வழங்கப்பட்டதோ அதற்காக மட்டுமே பயன்படுத்த வேண்டும். அவ்வாறு பயன்படுத்தாமல் இருப்பின் வருவாய்த்துறை மூலம் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி மீள எடுத்துக் கொள்ளப்படும்.

ஒம்/-எஸ்.பிரபாகர்,
மாவட்ட ஆட்சித்தலைவர்,
ஈரோடு.

//உண்மைநகல்/உத்தரவுப்படி//

மாவட்ட ஆட்சித்தலைவருக்காக.

பெறுநர்:

1. வட்டாட்சியர்,
சத்தியமங்கலம்.

2. செயற்பொறியாளர்,
தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம்,
திருப்பூர் கோட்டம்,
118, சக்தி நகர் 3வது வீதி,
போயம்பாளையம் பிரிவு, திருப்பூர் 641 602.

நகல்:

வருவாய் கோட்டாட்சியர்,
கோபிசெட்டிபாளையம்.

01/02/2020
EXECUTIVE ENGINEER
TNSCB, Tirupur Division

Scanned by CamScanner

Scanned with CamScanner

(8)

அனுப்புநர்
திரு. இரா. வாழவந்தான், பி.இ.,
நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்,
சேலம் மண்டலம்,
6, சன்னதி தெரு, சுப்ரமணியநகர்,
சூரமங்கலம், சேலம் – 636 005.
Telephone No.0427– 2448625 ,
e mail ddslmregion@gmail.com

பெறுநர்
தனி அலுவலர்/வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ),
பவானிசாகர் ஊராட்சி ஒன்றியம்,
கொத்தமங்கலம் ஊராட்சி,
சத்தியமங்கலம் வட்டம்,
ஈரோடு மாவட்டம்.

ந.க.எண். 18845/2018 சேல–3

நாள். 31.10.2019

அய்யா,

பொருள்: அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடம் – நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம் – சேலம் மண்டலம் – ஈரோடு மாவட்டம் – சத்தியமங்கலம் வட்டம் – பவானிசாகர் ஊராட்சி ஒன்றியம் – கொத்தமங்கலம் ஊராட்சி – இக்கரைதத்தப்பள்ளி கிராமம் – ச.எண். 94–ல் அமையும் 21150.00 ச.மீ. பரப்பு கொண்ட மனையிடத்தில் அமையும் உத்தேச தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்தின் 24 குடியிருப்புகள் கொண்ட பிளாக் A1 முதல் A20 வரை பிளாக்குளில் தரை தளம் + இரண்டு தளங்களுடன் 480 குடியிருப்புகள் கொண்ட அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடங்கள் கட்ட அனுமதி கோரியது – மனையிட ஒப்புதலும் அம்மனையில் கட்டிடம் கட்ட இசைவும் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:

1. நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம், திருப்பூர் கோட்டம் அவர்களின் கடிதம் ந.க.எண்.107/SCB/JA/Tpr Dvn/2017, நாள். 19.11.2018 மற்றும் 06.03.2019 மற்றும் ந.க.எண்.107/த.கு.ம.வா/தி.கோ/2017, நாள். 15.05.2019 மற்றும் ந.க.எண்.SCB/TDRDN/JA/107/18, நாள். 21.10.2019.
2. தனி அலுவலர்/வட்டார வளர்ச்சி அலுவலர், பவானிசாகர் ஊராட்சி ஒன்றியம் அவர்களின் கடிதம் ந.க.எண்.946/17/ஆ1, நாள். 15.10.2018.
3. அரசு ஆணை எண். 86, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (யுடி.4) துறை, நாள். 28.02.2012.
4. அரசு ஆணை எண்.135, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள். 21.07.2017.
5. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.7486/2009/பிஎ2, நாள் 16.04.2009.
6. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.12201/2017/spl.cell, நாள். 28.09.2017.
7. மாவட்ட அலுவலர், தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் நிலையம், ஈரோடு மாவட்டம் அவர்களின் கடிதம் ஓ.மு.எண்.10350/இ1/2018, நாள். 13.11.2018.
8. இவ்வலுவலக கடிதம் இதே எண் நாள். 07.01.2019, 04.04.2019 மற்றும் 28.05.2019 (நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களுக்கு முகவரியிட்டது).
9. இவ்வலுவலக கடிதம் இதே எண். நாள். 29.04.2019 (தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்திற்கு முகவரியிட்டது).
10. அரசு ஆணை எண். 85, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (யுடி.2–2) துறை, நாள். 16.05.2017.
11. அரசாணை எண். 135, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள். 21.07.2017.
12. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.21075/2009/பிஎ1, நாள். 04.04.2012.
13. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.12201/2017/சிபி, நாள். 28.09.2017.
14. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.14227/2017/சிபி, நாள் 14.12.2017.
15. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.516/2019/பிஎ2/TCP-4, நாள் 21.06.2019.

--------

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், பவானிசாகர் ஊராட்சி ஒன்றியம், கொத்தமங்கலம் ஊராட்சி, இக்கரை தத்தப்பள்ளி கிராமம், ச.எண். 94 –ல் அமையும் 21150.00 ச.மீ. பரப்பு கொண்ட மனைக்கு

..2

Scanned with CamScanner

'A முதல் D வரை' என எல்லையிட்டு மனையிட ஒப்புதலும், அம்மனையில் அமையும் உத்தேச தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்தின் 24 குடியிருப்புகள் கொண்ட பிளாக் A1 முதல் A20 வரை பிளாக்குகளில் தரை தளம் + இரண்டு தளங்களுடன் 480 குடியிருப்புகள் கொண்ட அடுக்குமாடி குடியிருப்பு கட்டுமான வரைபடங்களுக்கு க.வ/நகஊஇஎண்.121/2019 என எண்ணிடப்பட்டு சிறப்பு நிபந்தனை மற்றும் நிபந்தனைகளுடன் பார்வை 15-ல் காணும் நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை-2 அவர்களின் கடிதம் மூலம் இசைவு அளிக்கப்பட்டதை தொடர்ந்து கீழ்க்கண்ட சிறப்பு நிபந்தனைகள் மற்றும் பொதுவான நிபந்தனைகளுடன் கட்டிட அனுமதி வழங்க இசைவு அளிக்கப்படுகிறது.

<u>மனையின் பரப்பு</u> – <u>21150.00 ச.மீ.</u>

<u>உத்தேச அடுக்குமாடி குடியிருப்பு கட்டுமானப் பரப்பு விபரம்</u>

<u>AREA DETAILS</u>

| Typical block Name | Floor Name | Net FSI Area m² | Residential | | Total Built-up Area m² |
|---|---|---|---|---|---|
| | | | Balcony m² | Net FSI Area m² | |
| BLOCK - A1, A2, A3, A4, A5, A6, A7, A8, A9, A10, A11, A12, A13, A14, A15, A16, A17, A18, A19, A20. | Ground Floor | - | 13.36 | 283.47 | 296.83 |
| | First Floor | - | 13.36 | 283.47 | 296.83 |
| | Second Floor | - | 13.36 | 283.47 | 296.83 |
| Total for One Block | | | 40.08 | 850.41 | 890.49 |

FSI Area = 850.41 x 20 Blocks = 17008.20 m²

PARK Area = PARK-1 + PARK-2

= 884.46 + 1254.95

= 2139.41 ச.மீ.

<u>சிறப்பு நிபந்தனைகள்</u>

1) கட்டிட அனுமதிக்கு இசைவளிக்கப்பட்ட இட அமைப்பு வரைபடத்தில் கண்டுள்ள PARK-1-ற்கான வரிசை எண். 1 முதல் 4 வரையிலான 884.46 ச.மீ. பரப்புள்ள மற்றும் PARK-2-ற்கான வரிசை எண். 5 முதல் 8 வரையிலான 1254.95 ச.மீ. பரப்பு ஆக மொத்தம் PARK-1 மற்றும் Park-2-ற்கான 2139.41 ச.மீ. பரப்பளவு கொண்ட பொது உபயோக ஒதுக்கீடு திறவிடத்தினை தானமாக பத்திர பதிவு செய்து மனுதாரரால் சம்பந்தப்பட்ட உள்ளாட்சிக்கு ஒப்படைக்க வேண்டும். பத்திர நகல்கள் நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களுக்கும் மற்றும் இவ்வலுவலகத்திற்கும் ஒருவார காலத்திற்குள் அனுப்புதல் வேண்டும்.

2) It is responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundations.

3) Planning Permission is issued in accordance with the provisions of the Town and Country Planning act and the rules made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the Building Rules under the Local bodies Act. Planning Permissions is issued subject to the condition that the applicant/developer and also the architects/Licensed Surveyors and the Structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.

...3

Scanned with CamScanner

4) "நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில் நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல."

5) மத்திய மற்றும் மாநில அரசு துறையினரிடமிருந்து பெறப்பட்ட தடையின்மை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் கண்டிப்பாக நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.

6) The provisions in the G.O.(Ms) No.17, Housing and Urban Development (UD4(3)) Department dated: 05.02.2016 relating to installation and use of Solar Energy system should be followed.

7) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி "The Tamil Nadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development Department dated 22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation and Development) Act 2016. The Promoter has to advertise, market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any polot, apartment or building, as the case may be in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority"

<u>நிபந்தனைகள்</u>

1. உத்தேச பிளாக் A1 முதல் A20 பிளாக்குகளில் 480 குடியிருப்புகள் கொண்ட அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுமானத்திற்கு Solar Water Heating System அமைக்கப்பட வேண்டும்.

2. வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.

3. மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலை நிறுத்தப்பட வேண்டும்.

4. தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எந்தவித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.

5. மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண்.138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.11.10.2002-ன்படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.

6. உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், உபயோகிப்போருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் மற்றும் இதர தேவைக்கான நீர் வசதிகள் ஆகியவை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தரவேண்டும்.

7. மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத் தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றுக்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்.

8. உத்தேச கட்டுமானத்தில் விதிப்படித் தேவையான அளவுக்கு தீ தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.



Scanned with CamScanner

9. அரசாணை எண்.341, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (நக.1), நாள். 03.11.2004–ன்படி செப்டிக் டேங்கில் "U" Trap அமைத்தல் வேண்டும்.

10. சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு "FLY ASH BRICKS" மற்றும் Materials பயன்படுத்தப்பட வேண்டும்.

11. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும்போது அவ்விடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்.

12. உத்தேசம் குறித்து கழிவுநீர் வெளியேற்றுதல் தொடர்பாக தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரிய சட்டம் 1974 பிரிவு 25 (Water Act)-ன்படி மேற்படி வாரிய இணக்கம் (Consent) பெறப்பட வேண்டும்.

13. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் அசல் நகலுடன் மற்றும் இவ்வாணையின் நகல் வாங்குபவர்களுக்கு வழங்க வேண்டும்.

உள்ளாட்சி நடைமுறைகளுக்கு உட்பட்டு உரிய உத்தரவினை விண்ணப்பதாரருக்கு வழங்கும்படி தனி அலுவலர்/வட்டார வளர்ச்சி அலுவலர், பவானிசாகர் ஊராட்சி ஒன்றியம், கொத்தமங்கலம் ஊராட்சி அவர்களை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மனுதாரர் மேற்கொண்டு உத்தரவிற்காக தனி அலுவலர்/வட்டார வளர்ச்சி அலுவலர், பவானிசாகர் ஊராட்சி ஒன்றியம், கொத்தமங்கலம் ஊராட்சி அவர்களை அணுகுமாறு தெரிவிக்கப்படுகிறார்.

ஒப்புதல் பெறப்பட்ட உத்தரவு கடிதம் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகை சான்றினை உடன் அனுப்பி வைக்குமாறு தனி அலுவலர்/வட்டார வளர்ச்சி அலுவலர், பவானிசாகர் ஊராட்சி ஒன்றியம், கொத்தமங்கலம் ஊராட்சி அவர்களை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

31/10/19

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்,
சேலம் மண்டலம், சேலம்.

31.10.19

<u>இணைப்பு</u>
ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடங்கள்
2 தொகுப்புகள்.

<u>நகல்;</u>
நிர்வாக பொறியாளர்,
தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம்,
திருப்பூர் கோட்டம்,
188, சத்தி நகர் – 3வது வீதி,
போயம்பாளையம் பிரிவு,
பெருமாநல்லூர் ரோடு,
திருப்பூர் – 641 602.
} பத்தி ஒன்று மட்டும்.

07/02/2020
EXECUTIVE ENGINEER
T.N.S.C.B, TIRUPPUR DIVISION

Scanned by CamScanner
Scanned by CamScanner
Scanned with CamScanner



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate